**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**MC.No.03/2024**

**PW.1**

**நாள்: 01.07.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. சாதனா | வயது | 35 |
| கணவர்/தந்தை பெயர் | சக்திசபாபதி | கிராமம் | |

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி;</u>**

9. என்னுடைய மனுவில் என்னையும் என் குழந்தையும் என் அம்மா தான் பராமரித்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய சொத்து மற்றும் பொறுப்பு பட்டியலில் என் அம்மாவின் வருமானம் குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. உணவு, உடை, என் குழந்தையின் கல்வி செலவு மற்றும் மருத்துவ செலவு ஆகியவற்றிற்கு மாதம் ரூ. 2 லட்சம் தேவைப்படுவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எப்போது சிங்கப்பூரில் இருந்தேன் என்றால் 2021 முதல் 2022 வரையிலும் 2023 முதல் 2024 அக்டோபர் மாதம் வரை அங்கு இருந்தேன்.

10. இந்த மனு தாக்கல் செய்தபோது நான் மென்பொருள் பொறியாளராக பணிபுரிந்தேன் என்றாலும் அப்போது வந்த வருமானம் எனக்கு போதுமானதாக இல்லை என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். நான் வேலையை ராஜினாமாக செய்ததற்கு ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை. தேவை பட்டால் தாக்கல் செய்வேன். எதிர்மனுதாரர் எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை கொடுமை செய்ததாக மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் 2013 ஆண்டிலிருந்து 2023 ஆண்டு வரை எதிர்மனுதாரர் என்னை கொடுமை செய்துள்ளார்.

11. கொடுமை செய்ததற்கான நான் குற்ற நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. ஆனால் 2017 ஆண்டு தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து கோரி தாக்கல் செய்தேன். 2017 ஆண்டு முதல் தற்போது இந்த வழக்கு தாக்கல் செய்த வரை நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழவில்லை என்றால் 2016 ஆண்டு முதலே நாங்கள் சேர்ந்து வாழவில்லை. எதிர்மனுதாரர் எத்தனை ஆண்டுகளாக வெளிநாட்டில் வேலை செய்தார் என்றால் 10 ஆண்டுகள் வேலை செய்தார். என்னுடைய மகள் படித்து வரும் பள்ளியில் எதிர்மனுதாரர் உறுப்பினராக இருந்தார் என்றாலும் என்னுடைய அறிவுறுத்தலின் பேரில் அவரை அந்த குரூப்பில் இருந்து நீக்கிவிட்டார்கள் என்றால் சரிதான்.

12. அந்த குரூப்பில் தான் பள்ளி பற்றிய விவரங்கள், கட்டண விவரங்கள் ஆகியவற்றை பகிரப்படும் என்றால் சரிதான். குழந்தை பள்ளி சேர்க்கைக்காக எதிர்மனுதாரர் ரூ. 50 ஆயிரம் கொடுத்து இருந்தார் என்றால் அவர் அதற்காக கொடுக்கவில்லை. அவர் ஆஸ்திரேலியாவில் இருந்தபோது நானும் அவரும் குழந்தையின் கல்வி செலவுக்காக ஒரு பங்கை கொடுக்கலாம் என்று சொன்னபோது அப்போது தான் அந்த பணத்தை அவர் கொடுத்து இருந்தார். குழந்தையுடைய புத்தகம், Tuition கட்டணம், term பீஸ் ஆகியவற்றிற்கு ரூ. 55 ஆயிரம் கொடுத்து இருந்தார்

என்றால் சரியல்ல. சிங்கப்பூரில் வாழ்வதற்கும் இந்தியாவில் வாழ்வதற்கும் பொருளாதாரம் ரீதியாக பெரிய வேறுபாடு உள்ளது என்றாலும் சிங்கப்பூரில் அதிகம் செலவாகும் என்றால் சரிதான்.

13. ஆஸ்திரேலியாவிலும் வாழ்வதற்கு அதிகம் செலவாகும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தற்போது வரை வாடகை வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. அவருக்கு சொந்த வீடு உள்ளது. எங்கு உள்ளது என்றால் ஈரோடு பெரியார் நகரில் உள்ளது. நான் சொல்வது தவறு என்றாலும் அது அவரது சகோதரியின் வீடு என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் ரூ.5 லட்சம் சம்பாரிக்கிறார் என்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் நீதிமன்றத்தில் சமர்பித்துள்ள ஆவணங்களிலேயே ரூ. 5 ½ லட்சம் வருமானம் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். எதிர்மனுதாரர் ஆஸ்திரேலியாவில் வாழ்வதற்கு ஆகும் செலவுகளை நீதிமன்றத்தில் பட்டியலிட்டதை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதை மறுத்து நான் எதிர் வழக்குரை ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

14. அவருடைய பெற்றோரை அவர் தான் பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் குடும்பத்திற்கு வேறு வருமானம் இல்லை என்றாலும் அவர் அதில் தான் தன்னுடைய குடும்பத்தையும் பார்த்து கொண்டு குழந்தைக்கும் மாதம் ரூ. 10 ஆயிரம் அனுப்பி வருகிறார் என்றால் சரியல்ல. எனக்கு இரண்டு சொந்த வீடுகளும் மாதம் ரூ. 80 ஆயிரம் வருமானம் வருகிறது என்றாலும் எனவே நான் என்னை பராமரித்து கொள்ளும் அளவிற்கு வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ரூ. 80 ஆயிரத்திற்கு வருமானம் வருவதால் தான் என்னால் ரூ.80 ஆயிரம் மாத தவணை

செலுத்த முடிகிறது என்றால் சரியல்ல. தற்போது எனக்கு வருமானம் இல்லை.

15. எனக்கு போதிய வருமானம் வருகிறது என்றாலும் எனது வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்தால் அதன் உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் தான் நான் அதை தாக்கல் செய்யாமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நானும் என் அம்மாவும் சொகுசு வாழ்க்கை வாழ்வதற்காக எதிர்மனுதாரரிடம் இருந்து பணம் பறிப்பதற்காக நிலவரை வைத்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சொத்து மற்றும் பொறுப்பு பட்டியலில் உண்மை விவரங்கள் ஏதேனும் மறைத்து ஏதேனும் தாக்கல் செய்து இருந்தால் என் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கலாம் என்பது தெரியும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என் குழந்தைக்காக மாதம்தோறும் அனுப்பும் ரூ. 10 ஆயிரம் நான் தாக்கல் செய்துள்ள சொத்து மற்றும் பொறுப்பு பட்டியலில் காண்பிக்கப்படவில்லை என்றாலும் அந்த வகையில் என் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கலாம் என்றால் எனது வழக்கறிஞரிடம் அது குறித்து தெரிவித்து இருந்தேன்.

16. எதிர்மனுதாரர் தொடர்ந்து அந்த தொகையை செலுத்துவரா என்பது எனக்கு தெரியாததால் அதை நான் குறிப்பிடவில்லை. எனது குழந்தைக்கு மாதம் ரூ. 10 அயிரம் தொகை பராமரிப்பு போதுமானது என்றாலும் நான் அதிக தொகை கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தவறான சங்கதிகளுடன் நான் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை**

S/d- K.Nilavarasan, 01.07.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.